## *33*

# நாசரேத்தில் புறக்கணிப்பு

## (13:53-58)

*மாற்றம் பெறும் இந்தப் பகுதி ஒரு புதிய பாகத்தையும் 13ம் அதிகாரத்தின் உவமைகளுக்கு ஒரு முடிவுரையாகவும் காட்டுகிறது, இது 12:46-50 ன் பின்தொடர்ச்சி. இரண்டு பகுதிகளுமே ஜனங்களின் தவறாக புரிந்து கொள்ளுதலையும் இயேசு புறக்கணிக்கப்படுவதையும், அதே போல அவருடைய பூமிக்குரிய குடும்பத்தாரையும் குறிப்பிடும் பகுதி இது.*

### *"ஆச்சரியப்பட்டார்கள்" (13:53-56)*

***53**இயேசு இந்த உவமைகளைச் சொல்லி முடித்த பின்பு, அவ்விடம் விட்டு,*

***54**தாம் வளர்ந்த ஊரிலே வந்து, அவர்களுடைய ஜெப ஆலயத்திலே அவர்களுக்கு உபதேசம் பண்ணினார். அவர்கள் ஆச்சரியப்பட்டு: இவனுக்கு இந்த ஞானமும் பலத்த செய்கைகளும் எப்படி வந்தது?*

***55**இவன் தச்சனுடைய குமாரன் அல்லவா? இவன் தாய் மரியாள் என்பவள் அல்லவா? யாக்கோபு யோசே சீமோன் யூதா என்பவர்கள் இவனுக்குச் சகோதரர் அல்லவா?*

***56**இவன் சகோதரிகளெல்லாரும் நம்மிடத்தில் இருக்கிறார்கள் அல்லவா? இப்படியிருக்க இதெல்லாம் இவனுக்கு எப்படி வந்தது? என்று சொல்லி,*

***வசனம் 53. இயேசு இந்த உவமைகளைச் சொல்லி முடித்த பின்பு,*** *எனும் சொற்றொடர் ஒரு போதனைப்பகுதியை முடித்தவுடன், அடுத்த பகுதிக்கு கடந்து செல்லும் போதெல்லாம் மத்தேயு அநேக இடங்களில் இப்படிக்குறிப்பிடுகிறார் (7:28, 29; 11:1; 13:53; 19:1; 26:1). கர்த்தர்* ***உவமைகளைச் சொல்லி முடித்த பின்பு,*** *அங்கிருந்து அவர் புறப்பட்டார்; அதாவது கப்பர்நகூமை விட்டுப் போனார்.*

***வசனம் 54.*** *இயேசு* ***தாம் வளர்ந்த ஊரிலே*** *கலிலேயாவிலுள்ள நாசரேத்துக்கு வந்தார் (2:23 ற்கான விளக்கவுரையைக் காண்க). தமது தனிநபர் ஊழியத்தை துவங்கினதிலிருந்து தமது சொந்த ஊருக்கு வந்தது இது முதல் தடவையல்ல என்று தெரிகிறது. லூக்கா 4:16-30 வனாந்திரத்தில் அவர் சோதிக்கப்பட்ட சில நாட்களில் கப்பர்நகூமில் இயேசு தங்க துவங்குவதற்கு முன்பு அங்கே போயிருந்ததைக் காட்டுகிறது. மத்தேயு மாற்கு ஆகிய இரு புத்தகங்களிலுமே தமது ஊழியத்தின் பின் பகுதியில் இயேசு நாசரேத்துக்குப் போனார் என்று நாம் வாசிக்கிறோம் (மாற்கு 6:1-6).*

*"தம்முடைய வழக்கத்தின்படியே" (லூக்கா 4:16), இயேசு* ***வளர்ந்த***

***ஊரிலே வந்து, அவர்களுடைய ஜெப ஆலயத்திலே அவர்களுக்கு உபதேசம் பண்ணினார்.*** இந்த சம்பவங்கள் ஒரு ஓய்வு நாளில் நடந்ததாக மாற்கு குறிப்பிட்டார் (மாற்கு 6:2). மத்தேயுவில் உள்ள இந்த வசனப்பகுதிதான் ஜெப ஆலயத்தில் அவர் போதித்தாகக்கூறும் சுவிசேஷப் புத்தகங்களின் கடைசி வசனப்பகுதி. சொந்த ஊரான நாசரேத்தில் இருந்தவர்கள் இயேசுவின் போதனையைக் கேட்டு ஆச்சரியப்பட்டு ***"இவனுக்கு இந்த ஞானமும் பலத்த செய்கைகளும் எப்படி வந்தது"?*** என்றார்கள். அவர்களுக்கு ஏறத்தாழ அவருடைய வாழ்க்கை முழுவதும் தெரியும் (காண்க 2:19-23). நாசரேத்தை விட்டுப் போகுமுன், அவர் இடம் இடமாக சுற்றித் திரிந்து பிரசங்கிக்கக் கூடியவராக இருக்கவில்லை. அற்புதம் செய்யும் நபரும் அல்ல; ஆனால் இப்போது அவர் இரண்டுமாக இருக்கிறார்.

***வசனம் 55.*** இயேசு ***தச்சனுடைய குமாரன்*** என்று ஜனங்கள் அறிந்திருந்தார்கள். அவர் தம்முடைய பூமிக்குரிய தகப்பனின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி தாமே ஒரு தச்சனானார் (மாற்கு 6:3). யூத குடும்பத்தில் பிறந்த ஒருவன் தன் தகப்பனுடைய தொழிலைக் கற்றுக் கொள்வது வழக்கம் (காண்க பிலிப்பியர் 2:22). யூத பழமொழியில் "தன் மகனுக்கு ஒரு தொழிலைச் சொல்லிக் கொடுக்காதவன், அவனுக்குத் திருட சொல்லிக் கொடுக்கிறான்"[1] என்பர். கிரேக்க வார்த்தை *tektōn* பாரம்பரியமாக "தச்சன்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இயேசு பெரும்பாலும் தமது தகப்பனுடைய தச்சுப் பட்டரையில் வளர்ந்தது போல படம் வரைவார்கள், வீட்டுச் சாமான்களைச் செய்வது அல்லது உழவு வேலைக்கான கருவிகளைச் செய்தல் ஆகிய வேலைகளைச் செய்தார். ஆயினும், *tektōn* என்பது "கல்கட்டிட கொத்தனார்" அல்லது பொதுவாக கட்டிடத் தொழிலாளியையும் குறிக்கும்.[2] இந்த இரண்டாவது கருத்து இன்றைய வேத வல்லுநர்கள் மத்தியில் அதிகம ாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. நாசரேத் பெரிய நகரங்களான செசரியா மற்றும் திபேரியு ஆகிய இடங்களுக்குச் செல்லும் நெடுஞ்சாலையருகில் அமைந்திருந்ததால், யோசேப்பும் இயேசுவும் தங்கள் வேலைக்காக ஊர் ஊராகச் சென்றிருக்கலாம்.[3] கூடுதலாக, செப்ஃபோரிஸ் எனும் நகர் நாசரேத்துக்கு வடக்கே சில மைல் தொலைவில் இயேசுவின் இளம் பிராயத்திலிருந்து வாலிப வயதைத் தாண்டும்வரை ஏரோது அந்திப்பா என்பவனால் கட்டப்பட்டது. கட்டிடப் பணிக்காக இயேசுவும் யோசேப்பும் வழக்கமாக பயணம் பண்ணியிருக்கலாம்.[4]

ஜனங்கள் ***மரியாளை*** இயேவின் ***தாயாகவும், யாக்கோபு, யூதா யோசே சீமோன்*** ஆகியோரை ***அவருடைய சகோதரர்களாக*** ஏற்றுக் கொண்டிருந்தனர் (காண்க 12:46ன் விளக்கவுரை).

***வசனம் 56. இவன் சகோதரிகளெல்லாம் நம்மிடம் இருக்கிறார்கள் அல்லவா?*** என்று அவர்கள் கேட்டனர். அவர்களுடைய கேள்வியிலிருந்து இயேசுவுக்கு குறைந்தபட்சம் இரண்டு சகோதரிகள் இருந்துள்ளனர் என்பதையும், பெயரிடை சொல்படி "எல்லாரும்" என்பதால் இன்னும் அதிகமானோர் இருந்திருக்கலாம் என்று ஆலோசிக்கப்படுகிறது. இந்தப் பெண்களைப் பற்றி இங்கேயும் மாற்கு 6:3லும் குறிப்பிடப்படுகிறது ஆகிலும் அவர்களுடைய பெயர்களை கொடுக்கவில்லை. இந்தக் கேள்வி மேலும் இரண்டு ஆலோசனைகளைக் கொடுப்பதாக சிலர் நம்புகின்றனர். முதலாவதாக,

இயேசுவின் சகோதரிகள் "எல்லாரும் நம்முடன் இருக்கிறார்கள்" என்பது அவர்கள் உள்ளூரிலேயே மணம் முடித்து நாசரேத்தில் தங்கியிருக்க வேண்டும். இரண்டாவதாக, மரியாளும் அவருடைய சகோதரர்களும் இனியும் அங்கு குடியிருக்க வில்லை. அநேகமாக இயேசுவோடு அவர்களும் கப்பர்நகூமில் போய் தங்கியிருக்கலாம் (ஏனெனில் அவரே மூத்த மகன்). அவருடைய உலகப்பிரகாரமான தகப்பனாகிய யோசேப்பின் பெயர் குறிப்பிடப்படாததால், ஏற்கனவே அவர் மரித்திருக்கலாம்.

ஜனங்கள் மேலும், **இதெல்லாம் இவனுக்கு எங்கிருந்து வந்தன?** இயேசுவிடம் இருந்த அவர்கள் அறியாத ஒரு பக்கத்தைக் கண்டு அவர்கள் ஆச்சரியப் பட்டார்கள்.

## "இடறலடைந்தார்கள்" (13:57)

**[57]அவரைக் குறித்து இடறல் அடைந்தார்கள். இயேசு அவர்களை நோக்கி: தீர்க்கதரிசி ஒருவன் தன் ஊரிலும் தன் வீட்டிலுமேயன்றி வேறெங்கும் கனவீனமடையான் என்றார்.**

**வசனம் 57.** இயேசுவோடு நாசரேத்தில் இருந்தவர்கள் அவரை நன்கு அறிந்திருந்தபடியால், அவர்கள் **அவரைக் குறித்து இடறலடைந்தார்கள்.** நாசரேத்து ஜனங்கள் தேவன் தங்களிடத்திலிருந்து கூட ஒரு தீர்க்கதரிசியை எழுப்பக் கூடும் என்று விசுவாசிப்பது கடினமாக இருந்தது (காண்க யோவான் 1:46). அவருடைய உபதேசம் அவர்களுடைய விசுவாசத்திற்கு சவாலாக இருந்தது (லூக்கா 4:23-27). (அவர்கள் இடறலடைந்தார்கள் என்பதற்கு 11:6 ன் விளக்கவுரையைக் காண்க.) இயேசுவை அவர்கள் புறக்கணித்த படியால் அந்தக் கூட்டத்துக்கு அவர் **தீர்க்கதரிசி ஒருவன் தன் ஊரிலும் தன் வீட்டிலுமேயன்றி வேறெங்கும் கனவீனமடையான்** என்ற மிகவும் அறிந்த கூற்றை கூற வைத்தது.

## "அவிசுவாசம்" (13:58)

**[58]அவர்களுடைய அவிசுவாசத்தினிமித்தம் அவர் அங்கே அநேக அற்புதங்களைச் செய்யவில்லை.**

**வசனம் 58. அவர்களுடைய அவிசுவாசத்தின் விளைவாக இயேசு அங்கே அநேக அற்புதங்கள் செய்யவில்லை.** மாற்கு எழுதியுள்ளபடி, "அங்கே அவர் சில நோயாளிகள் மேல் கைகளை வைத்து, அவர்களை குணமாக்கினதேயன்றி, வேறொரு அற்புதமும் செய்யக் கூடாமல்" (மாற்கு 6:5). ஜனங்களுடைய அவிசுவாசத்தினால் அற்புதம் செய்யக் கூடாத அளவுக்கு இயேசுவின் பகுதியில் தோல்வியா? உண்மையில் அப்படியில்லை. ஜனங்கள் அவரிடத்தில் விசுவாசம் வைக்காதபடியால், அற்புதத்திற்கென ஒரு சிலரே வந்திருந்தனர், என்று வசனப்பகுதி சொல்லுகிறது. அவரில் விசுவாசம் வைத்து அவரிடத்தில் வந்தவர்கள் சுகம் பெற்றார்கள். பிரச்சனை இயேசுவின் வல்லமையில் இல்லை, ஆனால் அவரையும் அவருடைய உபதேசத்தையும் ஏற்றுக் கொள்ளாமல் ஜனங்கள் முரட்டாட்டம் உள்ளவர்களாயிருந்தனர்.

# கிறிஸ்துவினிமித்தம் நாம் இடறல் அடைகிறவர்களாயிருக்கிறோமா? (13:53-58)

*கிறிஸ்துவினிமித்தம் ஜனங்கள் இடறலடைந்தனர். அவருடைய சொந்த ஊரைச் சேர்ந்தவர்களே அவர் நிமித்தம் இடறலடைந்தார்கள் (13:57; மாற்கு 6:3; லூக்கா 4:28, 29; காண்க யோவான் 1:46). இன்றைக்கு ஜனங்கள் இடறலடையக் காரணம் என்ன?*

*1. கிறிஸ்து உலகக் காரியங்களைக் காட்டிலும் ஆவிக்குரியவைகளில் அதிக அக்கரை காட்டினார்.* சரீரத்தைக்காட்டிலும் ஆத்துமாவிலே அதிக அக்கரை காட்டினார், ஆகிலும் அதை அவர் சரியான தோற்றத்தில் வைத்தார். நாம் மிக முக்கியமானதாக எதைக் கருதுகிறோம்? நமது சமுதாயம் மாமிச காரியங்களில் மயங்கிக் கிடக்கிறது. ஊடகங்களான தொலைகாட்சி போன்றவை நமது பிள்ளைகளுக்கு சுய-தியாகம், சுயநலமின்மை, தன்னைத் தான் வெறுத்தல் போன்றவற்றைப் போதிக்காமல் சுய தேவைகளை பூர்த்தி செய்து கொள்ளுதல், மற்றும் சுய இரக்கம் போன்றவற்றைப் போதிக்கின்றனர். வாழ்க்கையில் எது உண்மையில் முக்கியம் என்பதைக் கற்றுக் கொண்டுள்ளனரா?

*2. கிறிஸ்து வாழ்க்கையில் சாதாரண இடங்களையே உயர்த்தினார்.* அவர் தம்முடைய நாட்களிலிருந்த யூதமதத்தின் ஆடம்பரங்களிலும் சூழல்களிலும் பிரியப்படவில்லை, அவர் ஒரு எளிய வழியில் ஒரு எளிய மனிதனாக வாழ்ந்தார். பலமுள்ளவைகளை வெட்கப்படுத்தும்படி அவர் பெலவீனமானவைகளைத் தெரிந்து கொண்டார் (1 கொரிந்தியர் 1:27). "கிறிஸ்துவிலுள்ள எளிமை" சிலர் கெட்டுப்போக ஏதுவாக்கி விடுமோ என்று பவுல் பயந்தார் (2 கொரிந்தியர் 11:3; NKJV). நமது எளிமையான ஆராதனையின் செயல்பாடுகளும் இரட்சிப்பின் எளிய படிகளும் கொண்டிருப்பதால் நாம் அவமானப்படுத்தப்பட்டிருக்கிறோமா?

*3. இயேசு தம்முடைய நாட்களிலிருந்த சில ஊறிப்போன நம்பிக்கைகளையும் பாரம்பரியங்களையும் எதிர்த்து முரணாகச் செயல்பட்டார்.* யூதர் மத தலைவர்களுடன் ஒத்துப் போயிருந்திருப்பாரேயாகில், அவர்கள் அவரிடத்தில் ஒரு பெருந்திரள் கூட்டமாக அவரிடத்தில் வந்திருப்பார்கள். மாறாக, அவர்களுடைய பாவ வாழ்க்கையையும் மதத் தவறுகளையும் கண்டனம் பண்ணி போதித்தார். அவர் அவர்களுடைய மாய்மாலத்தைக் குற்றப்படுத்தி நீதியை நடப்பிக்கும்படி அறிவுறுத்தினார் (6:2, 5, 16; 15:3-11). கிறிஸ்து பிரசித்தி பெற்ற தங்களுடைய உபதேசங்களை போதிக்காததால் இன்றைய மத உலகம் அதையறிந்து இடறலடைகிறார்கள். கிறிஸ்துவின் சுவிசேஷம் மட்டுமே இரட்சிப்பிற்கு தேவ பெலன் (ரோமர் 1:16).

நாம் இவ்வாழ்க்கையில் மாம்சக் காரியங்களைக் காட்டிலும் ஆவிக்குரியவைகளில் அதிக அக்கரையுள்ளவர்களாயிருக்க வேண்டும். கிறிஸ்து வந்து தினசரி, நம்மோடு நடந்து கொண்டிருப்பாரானால் எப்படியிருக்கும்? அவர் சொல்லுவதைக் கேட்டு இடறலடைவோமா?

குறிப்புகள்

[1]Tosefta *Qiddushin* 1.11. [2]Walter Bauer, *A Greek-English Lexicon of the New Testament and Other Early Christian Literature*, 3d ed., rev. and ed. Frederick W. Danker (Chicago: University of Chicago Press, 2000), 995. [3]காண்க W. F. Albright and C. S. Mann, *Matthew*, The Anchor Bible (Garden City, N.Y.: Doubleday & Co., 1971), 173. [4]Richard Batey, *Jesus and the Forgotten City* (Grand Rapids, Mich.: Baker Book House, 1991), 70-82.